**அம்பலாந்தோட்டை பிரதேச சபை**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 05 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 21 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பலாந்தோட்டை பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபையினால் உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 3,504,813 தொகை மற்றும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 118,043 தொகையான செலவினங்கள் என்பன நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த முத்திரைக் கட்டணத்தில் 2012 ஆம் ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ருபா 287,850 தொகை அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) சபையினால் நடாத்தப்படுகின்ற ஆயுர்வேத வைத்திய சாலைக்காக ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் நிதியுதவி மற்றும் தனியார் நன்கொடைகளாக கூட்டுமொத்தமாக ரூபா 212,973 கிடைத்திருந்த போதிலும் ரூபா 120,000 மாத்திரம் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுக் களஞ்சிய மீதி ரூபா 686,204 தொகை குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

----------------------------------------------------------------

நீண்ட காலமாக மூடப்பட்டுள்ள கடைகளுக்குரிய ரூபா 185,510 கூட்டுத்தொகையான நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 182 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் நிதிக்கூற்றுக்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

------------------------

**2.1 நிதி விளைவுகள்**

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,153,169 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,458,658 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

-------------------------------

**2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

--------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| -------------------- | ------------- | ------------- | ------------- |
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) வீதவரியும் வரியும் | 3,393 | 3,446 | 4,878 |
| (ii) வாடகை | 19,128 | 17,591 | 5,184 |
| (iii) அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,411 | 2,161 | 591 |
| (iv) ஏனைய வருமானம் | 46,245 | 41,299 | 65,981 |

### 2.2.2 ஆதனவரி

-------------------

ஆதனவரிக்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 4,878,231 நிலுவையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகை

-------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகைப் பெறுமதியான ரூபா 61,245 இனை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அம்பலாந்தோட்டை பொதுச் சந்தையில் 123 கடைகளின் மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 753,000 ஆகும். 2012 மே 08 ஆந் திகதி நடைபெற்ற நிதிச் செயற்குழுக் கூட்டத்தின் பிரகாரம் கடை வாகையான ரூபா 457,200 தொகையை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்பட்டமையால் வருடாந்தம் சபைக்கு சபைக்கு அறவிடவேண்டிய ரூபா 295,800 தொகை இழக்கப்பட்டிருந்தது.

**2.2.4 அறிவித்தல் பதாதை வருமானம்**

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறிவித்தல் பதாதை வருமானமாக ரூபா 222,300 தொகை அறவிட வேண்டியிருந்த போதிலும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(XXX) பிரிவின் பிரகாரம் அந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 இயந்திர உபகரண வருமானம்**

---

சபையினால் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட மோட்டார் கிறேடர், லோடர் இயந்திரம் மற்றும் பெகோ லோடர் இயந்திரம் என்பவற்றுக்கு உரிய பிரகாரம் வாடகை அறவிடப்படாதிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,560,831 தொகை வாடகையாக அறவிடவேண்டியிருந்தது. 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 5(6) இன் பிரகாரம் இந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இந்த நிலுவை வருமானத்தில் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 451,433 நிலுவை வருமானமும் உள்ளது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---

**சுகாதாரக் கட்டுப்பாட்டாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு**

---

2009 நவம்பர் 25 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 20/2009 ஆம் இலக்கத்தின் பிரகாரம் 2009 நவம்பர் 01 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படும் வகையில் சுகாதார தொழிலாளர் பதவிகளில் இருக்கின்ற ஒருவர் சுகாதார கட்டுப்பாட்டாளர் பதவிக்குச் சேர்க்கப்பட்டிருந்தார். அந்த பதவியின் தகுதிகாண் காலம் பூர்த்தியடைந்து நிரந்தரமாக்கும் போது பெறுபேறுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பரீட்சைகள் திணைக்களத்திற்கு பெறுபேற்றுச் சான்றிதழ் அனுப்பப்பட்டிருந்ததுடன் 2014 மே 21 ஆந் திகதிய உறுதிப்படுத்தலின் பிரகாரம் சுகாதார கட்டுப்பாட்டாளர் பதவிக்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகளைப் பெற்றிராத அவரினால் நிறுவகத்திற்கு வழங்கப்பட்ட பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழின் மூலப்பிரதியாக இல்லாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் போது 2014 யூன் மாதம் முதல் 2015 சனவரி மாதம் வரை ரூபா 200,772 கூட்டுத் தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

2015 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் இந்த நபரின் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் அவரிடமிருந்து சபைக்கு அறவிட வேண்டியிருந்த இடர்கடன் மீதி ரூபா 23,350 தொகை 2015 மார்ச் 26 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

------------------------------------------------------------

சபையின் உறுப்பினர்களினால் வெளித்தரப்பினர்களிடமிருந்து இயந்திர உபகரணங்கள் பெறப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக 2002 லீற்றர் எரிபொருள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 243,043 தொகை செலவிடப்பட்டிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 219(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவது பிரதேச சபையொன்றின் எந்தவொரு உறுப்பினரோ அல்லது ஊழியரோ பிரதேச சபையுடன் ஏற்படுத்தப்பட்ட அல்லது செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட ஏதாவது உடன்படிக்கை அல்லது வேலையொன்று தொடர்பாகவோ நிதித் தொடர்புகள் நேரடியாக அல்லது மறைமுகமாகவோ ஈடுபட முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக இந்த எரிபொருள் அளவிற்குரிய கட்டளை உறுப்பினரால் கையொப்பமிட்டு கையேற்கப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் கப்பற்துறை அமைச்சுச் செயலாளரின் 2014 யூலை 02 ஆந் திகதிய MPH/HYW/MNG/Cer/14-1 ஆம் இலக்க கடிதத்தின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வீதிகளுக்காக மூலப்பொருட்களைப் போக்குவரத்துச் செய்யும் போது மூலப்பொருளின் அடிப்படையில் சேர்க்கப்படுகின்ற 10 சதவீத மேலதிக கிரயம் சேர்க்கப்படாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 யூலை 02 ஆந் திகதியின் பின்னர் சபையினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அமுல்படுத்தப்பட்ட 32 வேலைகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் ரூபா 240,612 தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் அமுல்படுத்த்ப்பட்ட 06 வீதி வேலைகளுக்காக அந்த வீதிகளின் அடிப்பகுதிக்காகவும் கற்துண்டகளை இட்டு மேல்பகுதியில் கற்றுாள் போடுவதற்குத் தேவையான அளவினை விட கூடுதலாக கற்துாள் கொள்வனவு செய்யப்பட்டமையால் கூட்டுமொத்தமாக ரூபா 112,285 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சபையினால் செயற்படுத்தப்பட்ட 06 வேலைகளில் அந்த வீதிகளின் இருபக்கமும் நிர்மாணிக்கப்பட்ட கொங்கிரீட் தட்டிற்காக மெருகூட்டும் வேலைகளைச் செய்யும் போது கொங்கிரீட் தட்டுக்களின் நான்கு பக்கத்திற்காகவும் மெருகூட்டும் வேலைகள் செய்யப்பட்டதாகக் காண்பித்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மெருகூட்டும் வேலைகள் கொங்கிரீட் தட்டுக்களின் இருபக்கங்களுக்காக மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 06 வேலைகளில் இரண்டு பக்கங்களுக்காக ரூபா 87,246 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்